## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் **சாட்சி அ..சா.29**-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐஸ்வர்யா | வயது | 33/ 2022 |
| கணவர் பெயர் | மணிவண்ணன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுகுடித்தனம் | மதம் | |
| ஊர் | காஞ்சிக்குடிக்காடு ,மன்னார்குடி. | தாலுக்கா | மன்னார்குடி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மன்னார்குடி காஞ்சிக்குடிக்காடு கிராமத்தில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரி சக்திவேல், 2ம் எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும். பட்டியல் சாட்சி கார்த்திகா, வீரராஜன், ரமேஷ், அகிலராஜன் ஆகியோர்களில் கார்த்திகா, ரமேசை தெரியும். அந்த கார்த்திகா எனது நண்பர். ரமேஷ் என்பவர் எனது மாமா மூலம் தெரியும். வீடியோ கடை வைத்துள்ளார். 2018-ல் மார்ச் 2-ம் தேதியன்று ரமேஷ் என்பவர் எனது மாமா ஆனந்தனுக்கு போன் செய்தார். கோர்ட்டில் வேலை காலியாக உள்ளது என்றும், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாரூரில் பணியிடங்கள் உள்ளதாக சொன்னார். எனது மாமா ரூ.2 லட்சம் கொடுத்தால் வேலை கிடைத்து விடும் என்று ரமேஷ் சொன்னதாக சொன்னார். நான் தற்போது 2 லட்சம் கொடுக்க இயலாது. 1 லட்சம் வேண்டுமானால் கேட்டுப்பாருங்கள் என்றேன். ரூ.1 லட்சம் முன்பணமாக கொடுங்கள், வேலை கிடைத்தபிறகு மீத தொகை ரூ.1 லட்சம் கொடுங்கள் என்று 1வது எதிரி சக்திவேல் ரமேஷிடம் சொன்னதாக எனது மாமா கூறினார். நானும், எனது மாமனாரும் சேர்ந்து வந்து ரொக்கமாக ரூ.1 லட்சத்தை 1வது எதிரி சக்திவேலிடம் அவரது வீட்டில் வைத்து கொடுத்தோம். அப்போது 1வது எதிரியும் அவரது மனைவியும் இருந்தார். பணம் கொடுத்து 15 நாள் அல்லது 1 மாதத்தில் வேலை கிடைக்கும் என்று சொன்னார். மே

மாதம் கோர்ட் லீவு என்பதால் அதற்கு முன்பாகவே வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். ஒரு வாரம் கழித்து தொடர்ச்சியாக 1வது எதிரிக்கு போன் செய்தபொழுது கோர்ட்டிலிருந்து அழைப்பார்கள் என்றும், லெட்டர் வரும் என்றும் கூறினார். ஒரு வாரத்திற்கு பிறகு, எந்த தகவலும் இல்லை. தொடர்ச்சியாக போன் செய்துக்கொண்டிருந்தோம். வரும், வரும் என்று 1வது எதிரி பதில் கூறினார். எனது மாமா வெயிட் செய்துவிட்டு ரமேஷிடம் சென்று கேட்டபோது எல்லாரும் இப்படிதான் சொல்கிறார்கள், பணம் கொடுத்தவர்களுக்கு ரெஷ்பாண்ஸ் இல்லை என்று சொன்னார். எனது மாமாவும் ரமேஷிம் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டபோது நான் பணத்தை கோர்ட்டில் வேலை செய்யும் ஒரு லேடியிடம் பணம் கொடுத்துவிட்டேன். அவர் பெயர் கோவிந்தலெட்சுமி என்றும் சொன்னார். பின்னர் 2 வது எதிரியிடம் ரமேஷ் சென்று கேட்டபோது எனக்கு அதுபற்றி தெரியாது என்று கூறிவிட்டார்.அதற்கு பிறகு போலிசில் புகார் செய்தோம். அப்பொழுது போலிஸ் விசாரணையில் 1வது எதிரி சக்திவேல் 15 நாட்களில் பணத்தை கொடுத்துவிடுகிறேன் என்று எழுதி கொடுத்துள்ளார். அதற்கு பிறகு ரமேஷிடம் தொடர்பு கொண்டபொழுது கோர்ட்டில் வழக்கு உள்ளது என்று சொன்னரர். கோர்ட்டில் இருந்து கூப்பிடுவார்கள் என்றும் சொன்னார். எஸ்.பி.ஆபீஸில் புகார் கொடுக்க சென்றபோது எங்களுக்கு முன்பாக 83 நபர்கள் ஏமார்ந்துள்ளார்கள் என்று தெரியவந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

நான் முதல் விசாரணையில்சொல்லியுள்ள சங்கதிகளை காவல் துறை விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். வேலை கிடைக்கும் என்று ரமேஷ்தான் எனது மாமாவிடம் சொன்னாரா என்றால் ஆமாம். எனது மாமாதான் என்னிடம் சொன்னார் என்றால் ஆமாம். எனது மாமா ஆனந்தனை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஆறுமாதம் அல்லது 1 வருடத்திற்கு முன்பதாக விசாரித்தார்கள். சாட்சி தற்போது பணம் கொடுத்து ஆறு மாதம் அல்லது 1வருடத்திற்கு பின்பு விசாரித்தார் என்று கூறுகிறார். எனது மாமா இந்த கோர்ட்டில் சாட்சியமளித்துள்ளரா என்றால் இல்லை. 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்குபணம் கொடுக்க சென்றபோது யார், யார் சென்றீர்கள் என்றால் நானும், எனது மாமாவும் சென்றோம். நான் கொடுத்ததுபோல எனது நண்பர் கார்த்திகாவும் என்னுடன் வந்துதான் பணம் கொடுத்தாரா என்றால்

ஆமாம். கார்த்திகா யாருடன் வந்தார் என்றால் அவருடைய தந்தையுடன் வந்து கொடுத்தார். நான் பணம் கொடுக்கும்பொழுது 1வது எதிரி சக்திவேல், அவரது மனைவி, நான், எனது மாமனார், கார்த்திகா மற்றும் கார்த்திகாவின் தந்தை ஆகியோர்கள் இருந்தார்கள். ரமேசை வைத்துக்கொண்டு 1வது எதிரி சக்திவேலிடம் வேலை பெற்று தருவது தொடர்பாக நேரிடையாக பேசினோமா என்றால் இல்லை. நாங்கள் பணம் கொடுக்க போகும்போது 2 வது எதிரியை பார்த்தோமா என்றால் இல்லை. 1வது எதிரி வீட்டில்தான் கோர்ட்டில் வேலை செய்யும் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி குடியிருப்பதாக சொன்னார். 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலை செய்யவில்லை என்றால் ஆமாம். 2 வது எதிரி கோர்ட்டில்என்ன வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கோர்ட்டில்வேலை செய்வதாக சொன்னார்கள். எந்த கோர்ட்டில் வேலை செய்வதாக சொன்னார் என்றால் திருவாரூர் கோர்ட்டில்வேலை செய்வதாக சொன்னார். திருவாரூர் கோர்ட்டில் 2 வ து எதிரி வேலை செய்வது ரமேஷ்க்கு தெரியுமா என்றால் கோர்ட்டில்வேலை செய்வதாக சொன்னார். நான்தான் முதலில் ஆஜர் 1வது எதிரியிடம் அழைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன். அதற்கு அவர் ஆமாம், எனக்கு தெரிந்த ஒரு லேடி கோர்ட்டில்வேலை செய்வதாக சொன்னார். கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி மன்னார்குடியிலும் மக்கள் நீதிமன்றம் திறக்க போவதாக சொல்லி ரூ.1லட்சம் பணம் , பையோ டேட்டா கொடுங்கள் என்று சொன்னார். நாளையே கொடுங்கள் என்று சொன்னார்.மறுநாள் சென்று கொடுத்துவிட்டேன். அதற்கு பிறகு வேலை கிடைக்கவில்லையா என்றால் ஆமாம். அதற்கு பிறகு 1வது எதிரியிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வேன். ஏன் கடிதம் வரவில்லை என்று கேட்பேன். வரும் வெயிட்பண்ணுங்கள் என்று சொன்னார். எனது மாமனார் வேலை கிடைக்கவில்லை என்பதை எங்கள் ரமேஷிடம் சென்று கேட்டார். அதற்கு பிறகுதான் 1வது எதிரி வீட்டிற்கு சென்று கேட்டோம். 2018-லேயே சென்று கேட்டோம். 1வது எதிரியிடம் கேட்டதற்கு பணத்தை லேடியிடம் கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளார். அப்பொழுதுதான் 1வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்துள்ளார் என்பதை தெரிந்துக்கொண்டேன். 2 வது எதிரி நீதிமன்றத்தில்வேலை செய்வதால் அரசு வேலை கிடைக்கும் என்று நம்பியிருந்தேனா என்றால் நம்பியிருந்தேன். 1வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்து ஏமாந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் நியூஸ்பேப்பர் பார்த்து தெரிந்துக்கொண்டேன். 1வது எதிரியிடம் பணம் இல்லை என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் அவ்வாறு சொல்ல இயலாது. சாட்சியமளிப்பதற்கு

அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. நான் தனிப்பட்ட முறையில் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை, சுரேஷ் என்பவர் கொடுத்த புகாரில் எங்களையும் சேர்த்துக்கொள்வதாக சொன்னார்கள். சுரேஷ் புகார் கொடுப்பதற்கு முன்பே 1வது எதிரி 2 வது எதிரி மீது புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1வது எதிரி கொடுத்த புகாரை மறைத்துதான் இந்த சுரேஷ் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் மீது மோசடி வழக்கு இருப்பதாக தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம்.

**கு.வி. (2 ம் எதிரி தரப்பில் வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.)**

**மறுவிசாரணை - இல்லை.**

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் **சாட்சி அ..சா.30**-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதிகா | வயது | 38/ 2022 |
| கணவர் பெயர் | மைனர் | ஜாதி | |
| தொழில் | தனியார் பள்ளியில் ஆசிரியை | மதம் | |
| ஊர் | கீழத்தெரு, வடுவூர் புதுக்கோட்டை. | தாலுக்கா | நீடாமங்கலம் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் வடுவூர் புதுக்கோட்டையில்வசிக்கிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரி சக்திவேல், 2 ம் எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும். திருவாரூர் கோர்ட்டில் வேலை இருப்பதாக சொன்னார்கள். ரமேஷ் என்பவர் என்னிடம் சொன்னார். அவர் எனது குடும்ப நண்பர். ரமேஷ் என்பவர் 1வது எதிரி சக்திவேலின் காண்ட்க் நம்பர் கொடுத்தார். நான் அவரை தொடர்பு கொண்டு பேசினேன். 1வது எதிரி வேலை இருப்பதாகவும், ரூ.2 லட்சம் ரூபாய்கொடுக்க வேண்டும் என்றும், முன்பணமாக ரூ.1 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு பிறகு நான் 1 வது எதிரியிடம் அவரது வீட்டிற்கு சென்று ரூ.1 லட்சம் கொடுத்துவிட்டேன். அப்போது அவரது வீட்டில் 1வது எதிரி அவரது மனைவி, அவரது அம்மா இருந்தார்கள். பின்னர் 3 மாதம் வேலை வந்து விடும் என்று காத்திருந்தோம். வேலை வரவில்லை. அவரை தொடர்பு கொண்டு பேசினேன். நான் வேறிடத்தில் பணம் கொடுத்துள்ளேன். வேலை வந்துவிடும் என்று கூறினார். கோர்ட்டில் வேலை செய்யும் கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்துள்ளதாகவும், வேலை கிடைத்துவிடும் என்றும் சொன்னார். வேலை கிடைக்கவில்லை. 1 வது எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டோம். 1வது எதிரி வீட்டிற்கு பக்கத்துவீட்டில் உள்ள 2 வதுஎதிரியிடம் கேட்க சொன்னார், அவரிடம் கேட்டபொழுது என்னிடம் பணம் கொடுக்கவில்லை, 1வது எதிரியிடம் கொடுத்துள்ளீர்கள், அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று

சொன்னார். 1 வருடம் ஆனபிறகு பேச்சுவார்த்தை நடத்தி பின்பு காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். நாங்கள் டி.சி.பி. போலிசில் சென்று புகார் கொடுத்தோம். அப்பொழுது எங்களுக்கு முன்பே பல நபர்கள் புகார் கொடுத்துள்ளதை தெரிந்துக்கொண்டேன். போலிசில் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான்எனக்கு வேலை வாங்க வேண்டும் என்றுதான் தொடர்பு கொண்டேன், ஆனால் எனது அண்ணனுக்கு வேலை கேட்பதாக தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது. நான் திருமணமானவர். தற்பொழுது வடுவூர் புதுக்கோட்டையில் வசிக்கிறேன். ரமேஷ் என்பவர் கோர்ட்டில் வேலை இருப்பதாக சொன்னார். அவர் சொன்னதன் அடிப்படையில் 1வது எதிரியை தொடர்பு கொண்டேன். நான் யாரிடம் பணம் கொடுத்தேன் என்றால் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன்.அப்பொழுது அவரும் , அவருடைய மனைவியும் இருந்தார்கள். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை, மார்ச் மாதம், 2018-ல் பணம் கொடுத்தேன். பணம் கொடுக்க நானும், கார்த்திகாவின் அப்பா டெய்லரும் சென்று கொடுத்தோம். நான் 1 வது எதிரியிடம் வேலை கிடைக்காதது சம்பந்தமாக கேட்டபொழுது கோர்ட்டில் வேலை செய்யும் 2 வது எதிரியிடம் பணம் கொடுத்ததாக 1வது எதிரி சொன்னார். 2 வது எதிரியிடம் நேரில் சென்று கேட்டபொழுது அவர் எனக்கு தெரியாது என்றும், பணம் என்னிடம் கொடுக்கவில்லை என்றும் 1வது எதிரியிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார். இது சம்பந்தமாக 2 வது எதிரியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன், அவர் தனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டார்.மீண்டும் 1வது எதிரியிடம் கேட்டேன். ரமேஷ் என்னிடம்சொல்லும்போது 1 வது எதிரிக்கு கோர்ட்டில் வேலை செய்யும் தெரிந்த நபர் உள்ளார் என்றும் சொன்னார். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி பணிபுரியும் அலுவலகத்தில் உள்ள அவருடைய சீனியரை எனக்கு தெரியும் என்று 1 வது எதிரி கூறி வேலை வாங்கி தருவதாக சொன்னார். 1வது எதிரியிடம் பணத்தை கேட்கும்பொழுது 2 வது எதிரியிடம் பணம் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் வார்த்தை மூலம் தெரியும். 1வது எதிரி 2 வது எதிரி மீது பணம் கொடுத்தது சம்பந்தமாக புகார் அளித்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். பணத்திற்கு 1வது எதிரி பொறுப்பல்ல, 2 வது எதிரிதான் முழுபொறுப்பு என்றால் நாங்கள் 1வது எதிரியிடம்தான் பணத்தை

கொடுத்தோம். 1வது எதிரி முதலில் வேலை வாங்கி தருவதாக என்னை தொடர்புகொள்ளவில்லை என்றால் ஆமாம், நான்தான் தொடர்பு கொண்டேன். 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதாக தெரிந்து கொண்டேனா என்றால் 1வது எதிரி சொல்லி தெரிந்துகொண்டேன். நீதிமன்றத்தில் 2 வது எதிரி பணிபுரிவதால்தான் அரசு பணி கிடைக்கும் என்று நம்பினேன் என்றால் ஆமாம். 1வது எதிரி அரசாங்க பணியில் உள்ளாரா என்றால் இல்லை. போலிஸ் எப்பொழுது விசாரித்தார்கள்என்றால் 2019-ல் விசாரித்தார்கள். நான் கொடுத்த ரூபாய் 1லட்சம் 1வது எதிரியிடம் இல்லை என்று சொன்னால் நான் 1வது எதிரியிடம்தான் கொடுத்தேன். 1வது எதிரியிடம் பணம் இல்லை என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்,அது அவர் சம்பந்தப்பட்ட விஷயம், அவர் 2 வது எதிரியிடம் பணத்தை கொடுத்தாரா இல்லையா என்பது தெரியாது. 2 வது எதிரி நீதிமன்றத்தில்பணிபுரிவதால் அவருக்கு ஆதரவாகவும், 1வது எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 ம் எதிரி தரப்பில் வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.)**

**மறுவிசாரணை - இல்லை.**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.25/2020**

2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் **சாட்சி அ..சா.31**-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யப்பன் | வயது | 33/2022 |
| கணவர் பெயர் | தெட்சிணாமூர்த்தி | ஜாதி | |
| தொழில் | டெய்ல்ஸ் ஓட்டும் கொத்தனார் | மதம் | |
| ஊர் | தெற்கு தெரு, ஓரத்தூர் | தாலுக்கா | மன்னார்குடி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் ஓரத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரி சக்திவேல், 2 ம் எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும். நான் டெய்ல்ஸ் ஒட்டும் பணி செய்து வருகிறேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீதிமன்றத்தில் ஆபீஸ் பாயாக வேலை வாங்கி தருவதாக ரமேஷ் என்பவர் என்னிடம் சொன்னார். அவர் மூலமாக 1வது எதிரி சக்திவேலிடம் ரூ.1 லட்சம் பணம் கொடுத்தேன். அந்த பணத்தை அவரது வீட்டில் வைத்து கொடுத்தேன். மொத்தமாக வேலை வாங்கி கொடுக்க ரூ.2 லட்சம் கேட்டார். முன்பணமாக ரூ.1 லட்சம் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்பொழுது 1வது எதிரியின் மனைவி மற்றும் அம்மா இருந்தார்கள். பணம் கொடுக்கும்போது நான், ரமேஷ், எனது சித்தப்பா பாலகிருஷ்ணன் ஆகியோருடன் சென்றோம். 1வது எதிரி பணத்தை பெற்றுக்கொண்டு 15 நாட்களில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். 1வது எதிரி கோர்ட்டில் ஆள் இருப்பதாகவும், அவர்கள் மூலமாக வேலை வாங்கி தருவதாகவும் சொன்னார். கோர்ட்டில் வேலை செய்யும் நபர் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. டி.சி.பி. போலிசில் விசாரிக்கும்போது 2 வது எதிரியை பார்த்தோம். 1வது எதியிடம் வேலை வாங்கி தராததால் பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டேன். வேலை வாங்கி தருவதாக காலதாமதம் செய்தார். இதற்கிடையில் சுரேஷ் என்பவர் கேஸ் கொடுத்துவிட்டார். அப்பொழு டி.ஜி.பி. ஆபீஸில் 83 பெயரில் என் பெயர் உள்ளதாகவும் என்னை விசாரிக்க கூப்பிட்டார்கள்.

திருவாரூர் போலிசில் கூப்பிட்டார்கள். 2018 பிப்ரவரி மாதத்தில் பணம் கொடுத்தேன். வேலை கிடைக்கும் என்று காத்திருந்தேன். நான் பணத்தை 1வது எதிரியிடம் திருப்பி கேட்டேன். நான் பணத்தை வேறொரு நபரிடம் கொடுத்துவிட்டேன். வந்தால்தான் கொடுப்பேன், கேஸ் நடந்து கொண்டிருக்கிறது, முடிந்தவுடன் தருவதாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1ம் எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ரமேஷ் எனக்கு உறவினரா என்றால் எனது சித்தப்பாவிற்கு நண்பர். என்னிடம் வேலை வாங்கி தருவதாக யார் சொன்னார்கள் என்றால் எனது சித்தப்பா பாலகிருஷ்ணன் சொன்னார். என்ன வேலை என்றால் ஆபீஸ் பாய் என்ற வேலையாகும். பணம் செலவு செய்தால் கோர்ட்டில் வேலை செய்யும் நபர் மூலமாக வேலை வாங்கி தருவதாக ரமேஷ் சொன்னார். பணம் கொடுக்கும்போது 1வது எதிரியும் சொன்னார். பணத்தை கொடுத்ததற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் 15 நபர்கள் கொடுத்ததற்கான ஆவணம் ரமேஷிடம் உள்ளது. நான் பணமே கொடுக்கவில்லை. கொடுக்காத பணத்தை கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். எனது சித்தாவிற்கு நண்பர் என்ற முறையில் 1வது எதிரி வீட்டிற்கு அடிக்கடி செல்வேன் என்றும், அதனடிப்படையில் பணம் கொடுத்தேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் பணம் கொடுத்திருந்தால் 2 வது எதிரியை பார்த்து பேசியிருப்பேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி நீதிமன்றத்தில்வேலை செய்கிறார் என்ற விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்கிறார் என்ற விபரம் தெரிந்ததால்தான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன் என்றால் ஆமாம். 2 வது எதிரி நீதிமன்றத்தில் பணி செய்வதால் அவருக்கு சாதகமாகவும், 1வது எதிரிக்கு பாதகமாகவும் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை போன்மூலம் தொடர்பு கொண்டு லிஸ்ட்டில் எனது பெயர் இருந்ததால் விசாரணைக்கு அழைத்தார் என்றால் சரிதான். நான் எழுத்துப்பூர்வமாக எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. 2 வது எதிரியை வீட்டில்சென்று பார்த்தேனா என்றால் இல்லை, காவல் நிலையத்தில் பார்த்தேன். புகார் பதிவு செய்யப்பட்டபிறகு பார்த்தேனா என்றால் ஆமாம். 1வது எதிரி காவல் நிலையத்தில் 2 வது எதிரி மீது புகார் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

**கு.வி. (2 ம் எதிரி  தரப்பில்  வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.)**

**மறுவிசாரணை -   இல்லை.**